Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 | மலர் 9
போன் 389 | இதழ் 310

National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 4 ரம்ழான் 16 செவ்வாய்க்கிழமை (19-12-67)

## இடமாற்ற ஆசிரியா 20-ம் திகதிக்கு முன் மனுச்செய்யலாம்

உடுவில், திங்கள்

இம்மாதம் 20-ந் திகதிக்கு முன்னர் தமது இடமாற்றம் பற்றி தகுந்த காரணங்களுக்காக அதனை ரத்துச் செய்யும்படி வேண்டிக்கொள்ளும் ஆசிரியர்கள் பற்றி கல்வி அமைச்சு பரிசீலனை செய்யவிருக்கிறது. 20-ந் திகதிக்கு முன்னர் தமக்குக் கிடைக்கும் ஆட்சேபனை விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், பின்னர் கிடைக்கும் எந்த மனுவும் எதுவித காரணங்கொண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாதென்றும் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கமகே கூறியுள்ளார்.

வடமாகாண ஆசிரியர்களின் இடமாற்றங்கள் சம்பந்தமாக நேற்று முன்தினம் தமிழ் எம். பி.க்கள் சிலர், திரு. கமகேயைச் சந்தித்து பேசிய பொழுது தான் மேற்கண்டவாறு தெரிவித்தாராம்.

வடமாகாண ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக

6-ம் பக்கம் பார்க்க

# ஒரு மாதத்தில் ஒரு ரூபாவுக்கு ஒரு கொத்து அரிசி கிடைக்கும்

## அரிசி வியாபாரிகள், ஆலை முதலாளிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

இன்னும் ஒருமாத காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு கொத்து அரிசியை ஒருரூபாவிற்கு விற்பனைசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக, 22 ஆலைச் சொந்தக்காரர்களும், அரிசிவியாபாரிகளும் நேற்று வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திடம் தெரிவித்தனர்.

ஆனையிறவில் உள்ளதடை காரணமாக யாழ்ப்பாணத்தில் அரிசியின் விலை ஏறியுள்ளதாக தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்து வடபகுதி பொலிஸ் அதிபர், ஆலைச் சொந்தக்காரர்களையும் அரிசிவியாபாரிகளையும் அழைத்து இது பற்றி ஆராய்ந்தார்.

அரிசி விலை ஏற்றத்துக்கு ஆனையிறவுத்தடை ஒரு காரணமாக இருக்கவில்லையென்றும், மழைகாலம் இதற்கு ஒரு காரணமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் 1கொத்து அரிசி 2 ரூபாவாக விற்பனைசெய்யப்படுவதாகவும் இவ்விலை அடுத்த மாதம் 1 ரூபாவாகக் குறையுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அரிசியின் உத்தரவாத விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் அரிசியின் விலை அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் பொலிஸ் அதிபரிடம் கூறியதாகத் தெரியவருகிறது.

திருமலையில்

## பெருந்தொகையான அரிசி, மாவு நாசம்

### இதனால்நஷ்டம் ஏழரைலட்சம்ரூபாய்

திருகோணமலை, திங்கள்

அயல நாடுகளில் இருந்து கப்பல்களில் இங்கு வந்து சேரும் அரிசி, மாவு முதலியன திருமலை உணவு- அலுவலகத்தால் துறைமுகத்தில் இறக்குமதியாக்கப்பட்டு களஞ்சிய அறைகளில் சேமித்து வைக்கப்படுகின்றன. பின்னர் இவற்றை இங்கிருந்து றெயில்வே பெட்டிகளிலும், மோட்டோர்லொறிகளிலும் ஏற்றிஅனுப்பி நாடு பூராவும் விநியோகிக்கப்படுகின்றன. இப்படி இறக்கி வைக்கப்பட்டிருந்த தானியங்களில் ஏற்கனவே 5,000க்கும் மேலான மூடைகளடங்கிய அரிசி சேதமாகிவிட்டது. தற்போது இங்கு சில தினங்களாகத் தொடர்ந்துபலத்தகாற்றுடன் கூடிய பெருமழை பெய்து வருவதால் இன்னும் 6000க்கும் அதிகமான மூடைகளடங்கிய மாவு நாசமாகிவிட்டது. இதனால் ஏற்பட்ட நஷ்டம் ஏழரைலட்சம்ரூபாய்க்குமேலானதெனக் கணக்கிடப் பட்டுள்ளது. இந்த சேதம் குறித்து இங்குள்ள உணவுஇலாகா அதிகாரிகள் பெரும் பீதியடைந்திருக்கின்றனர். திருகோணமலைப் பட்டினத்திலிருந்து சுமார் 10மைல்களுக்கப்பால்உள்ள ''கிளப்பன் பேர்க்'' என்னும்இடத்திலுள்ள தானிய அறைகளில் தான் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. பிரஸ்தாப சம்பவம் நிகழ்ந்த இந்தத் தானிய அறையில் மட்டும் ஒருலட்சத்திற்கும் அதிகமானமூடைகள் அடுக்கி வைப்பதற்கு வேண்டிய இடவசதிகள் இருந்தபோதிலும் பாதுகாக்கப்படாததினால் கட்டிடத்தின் கூரையிலும் பக்கவாட்டுச் சுவர்களிலிருந்து மழைநீர் வழிந்து அறையை அடைந்துள்ளதெனத் தெரிய வருகின்றது. உணவுக்குப் பாவிக்க முடியாது பழுதடைந்த மாவு மூடைகள் கல்லுப்போன்று எடையைப் பெற்றிருப்பதனால் தொழிலாளர்கள் கடினமான ஆயுதங்களைப் பாவித்தே இவற்றை அப்புறப்படுத்துகின்றனர்.

## திருமலைக்கு இன்று வரும் உணவு கப்பல்கள்

காங்கேசன்துறை, திங்கள்

திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப் பட்டதன் பின் இரண்டாவது உணவுக் கப்பலும் மாவுக் கப்பலும் இன்று திருமலை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

''இஞ்சிடக்லஸ்'' என்னும் மாவுக் கப்பல் சுமார் 9,540 தொன் நிறையுடன் வருகிறது. சுமார் 85,000 மூடைகள் அடங்கிய இம் மாவுக் கப்பல் 20 நாட்கள் இங்கு தங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன்துறை

## துறைமுக அபிவிருத்தி: அரசாங்கஅதிபர்உறுதி

புலோலி, திங்கள்

காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்திசெய்வதற்குச் சகல நடவடிக்கைகளும் தாம் மேற்கொள்ளவிருப்பதாக வடமாகாண அரசாங்க அதிபர் கூறினார்.

யாழ்ப்பாணம் துறைமுகச் சேவைச் சமாசத்தின் கருத்தரங்கில் பேசுகையிலேயே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு கூறினார். வடபகுதிக் கூட்டுறவுத் துறைமுகத் தொழிலாளர் மற்றத் துறைமுகத் தொழிலாளரிலும் திருப்திகரமாகப் பணியாற்றியுள்ளனர் எனவும் அவர் சொன்னார்.

ஒருநாட்டின் முன்னேற்றம தொழிலாளரிலேயே தங்கியுள்ளதாகவும் அவர்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் கருத்தரங்கில் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர்

[2-ம் பக்கம் பார்க்க]

### 'ஈழநாடு' பஞ்சாங்கம்

'ஈழநாடு' 1-1-68 இதழில், வழக்கம் போல் 1968-ம் வருட 'ஈழநாடு பஞ்சாங்கம்' இணைக்கப்பட்டிருக்கும்.

அதிகப் பிரதிகள் வேண்டும் விற்பனை ஏஜண்டுகள், 27-12-67க்கு முன்னதாக எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகி,
ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

### 'ஈழநாடு' நத்தார் சிறப்பிதழ்

'ஈழநாடு' 24-12-67 பத்திரிகை நத்தார் சிறப்பிதழாக வெளிவரும்.

## சாவகச்சேரியில் 175-வது தேசியலொத்தர் சுவீப்சீட்டிழுப்பு

### ஜனவரி 4-ல் நடைபெறும்

புலோலி, திங்கள்

தேசிய லொத்தர் சபையின் 175-வது சுவீப் சீட்டிழுப்பு சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில்நடைபெறவிருக்கிறது. அடுத்த ஆண்டு ஜனவரி 4-ந் தேதி மாலை இச்சீட்டிழுப்பு நடைபெறும். உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் முதற்பரிசுக்கான அதிர்ஷ்டச்சீட்டை இழுப்பர். இரண்டாவது பரிசுக்கான அதிர்ஷ்டச்சீட்டை சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினமும், மூன்றாவது பரிசுக்கான சீட்டை சாவகச்சேரி பட்டினசபைத் தலைவர் திரு. கே. டி. சிவகுருவும் இழுப்பர்.

ஏற்கனவே வடபகுதியில் தேசிய லொத்தர்சபைசுவீப் மூலம் லட்சாதிபதியானவர்கள், பரிசு பெற்றவர்களைக் கொண்டு ஆறுதல் பரிசுக்கான சீட்டுக்களை இழுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சீட்டிழுப்பைத் தொடர்ந்து நாடகங்களும், கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற விருக்கின்றன பிரபல [illegible]ளத் திரைப்பட நடிகை ருக்மணிதேவியின் சிங்களப் பாட்டுக்கச்சேரியும் விசேஷ நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது.

சீட்டிழுப்பு நடைபெறவிருக்கும் அன்றைய தினம் முதலாம், இரண்டாம் பரிவுக்குரிய கார்கள் பொதுமக்கள் பார்வைக்காக காட்சிக்கு வைக்கப்படும்.

மேற்கண்ட தகவல்களை நேற்று சாவகச்சேரி சுவீப் டிக்கற் விற்பனையாளர் கூட்டத்துக்குத் தலைமை வகித்த தேசிய லொத்தர் சபைத் தலைவர் திரு. இளற்வின் [illegible] தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பணிவும் ஆர்வமும் இருந்தால் உங்கள் குருவை நீங்கள் கண்டறிவீர்கள். ஏனெனில் இறைவனது கருணையே மனித உருவில் குருவாக வந்து எம்மை ஆட்கொள்கின்றது.

— சுவாமி வேங்கடேசானந்தர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 4ம் திகதி [19-12-67]

## பிரதமர் காட்டும் வழி

அரசாங்க இலாகாக்களும், அரசாங்க ஆதரவிலுள்ள கூட்டுஸ்தாபனங்களும் ஒழுங்கு செய்திருந்த வருடாந்த விருந்துபசார நடன நிகழ்ச்சிகளை ரத்துச் செய்யும்படி பிரதமர் திரு. டட்லிசேனநாயகா உத்தரவிட்டிருக்கிறார். இந்த உத்தரவைத் தொடர்ந்து நடனநிகழ்ச்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. சிக்கனமாக வாழ வேண்டுமென்று பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தால் மட்டும் போதாது. சொல்பவர்கள் செயலிலும் காட்ட வேண்டும். பிரதமர் இதைச் செயலில் காட்டியிருக்கிறார்; அவர்பாராட்டுக்குரியவர்.

இலங்கை ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதாரம் அவலநிலையை அடைந்தது. விலைவாசிகள் உயர்ந்தன. இதை எதிர்பார்த்து ரூபாயின் மதிப்பைக் குறைக்க முடிவு செய்த அதே சமயம் அரசாங்க ஊழியரின் 'அலவன்சை'யும் அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்தது. இதைத் தொடர்ந்து தனியார் துறையினரும் சம்பள உயர்வு கோரினர். சம்பள உயர்வு அளிக்கப்படவேண்டுமென அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. எனினும் தனியார்துறை ஊழியரும் தோட்டத் தொழிலாளரும் அரசாங்கம் உத்தரவிட்ட 'சம்பள உயர்வில்' திருப்தியடையவில்லை. கிளர்ச்சிக்கும் வேலை நிறுத்தங்களுக்கும் முஸ்தீபுகள் நடைபெற்று வருகின்றன. நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளதால் பொதுமக்கள் சிக்கன வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பிரதமர் வேண்டுகோள் விடுத்திருந்தார். இது பற்றி இம்மாதம் 4-ந் திகதி இதேபத்தியில் நாம் குறிப்பிட்டபொழுது இந்தியாவில் உணவு நெருக்கடி ஏற்பட்டதும் அப்போது பிரதமராக இருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி வாரத்தில் ஒருநாள் ஒருநேர உணவைக் கைவிட்டு மற்றவர்களும் இவ்விதம் ஒரு நேர உணவைத் தியாகம் செய்ய வேண்டுமென வழிகாட்டியதுபற்றிச் சுட்டிக்காட்டி, இங்கும் சிக்கன வாழ்க்கைக்கு பிரதமர் முதல் மற்றும் தலைவர்களும் செயலில் வழிகாட்ட வேண்டுமெனத் தெரிவித்திருந்தோம்.

பிரதமர் வழிகாட்டத் தொடங்கியிருக்கிறார். வருடாந்த நடனநிகழ்ச்சிகளை ரத்துச்செய்திருக்கிறார். வருடாந்த நடன நிகழ்ச்சிகள் மட்டுமல்ல மற்றும் ஆடம்பர நிகழ்ச்சிகள், விருந்துபசாரங்கள் இன்றும் பலஇடங்களில் நடைபெற்றுக்கொண்டுதானிருக்கின்றன. வாழ்க்கை வசதி படைத்தவர்கள் தாமாகவே, ஆடம்பர வைபவங்களையும் ஆடம்பரச் செலவுகளையும் விலக்கிக் கொள்ளவேண்டும்.

அரசாங்க ஊழியர்களினதும் மற்றும் தனியார் துறை ஊழியர்களினதும் சம்பளம் உயர்வதால் அவர்கள், தமது வாழ்க்கைச் செலவு உயர்வைச் சமாளிக்கமுடியும். ஆனால் மாதச்சம்பளம் பெருத, அன்ருடம் உழைத்துப் பிழைக்கும் பெருந்தொகையான மக்கள் நிலை என்ன? சம்பளம் அதிகரித்தால் மட்டும் போதாது; நாட்டின் உற்பத்தியை அதிகரித்து, அதேசமயம் இறக்குமதியைக் குறைத்து, விலைவாசி உயர்வைக் குறைக்க வேண்டும். இதற்கு வசதியுடையவர்களே வழிகாட்ட வேண்டியது அவசியம்.

# "வருமானவரியை உத்தேசித்து செய்வது தர்மம் அல்ல"

## வரவேற்பு வைபவத்தில் சுவாமி வெங்கடேசானந்தாஜி

யாழ்ப்பாணம், செவ்.

"இந்துக்கள் குரங்கு, யானை போன்ற உருவங்களையும், மண், கல்லினாலான உருவங்களையும் கடவுள் என்று வணங்குவதை குரங்கு மனம்கொண்ட சிலர் கேலிசெய்கிறார்கள். ஆனால் ஒருநிலைப்படுத்தமுடியாத குரங்கு மனத்தை உடையவர்களால், அதே குரங்கைக் கோவிலுக்குரிய விக்கிரகமாக்கி வணங்குவதன் தத்துவத்தைப் புரிந்து கொள்வதில்லை. சைவ சமயத்தின் ஒவ்வொரு அங்கங்களும் ஒவ்வொரு ஆத்மீக தத்துவத்தை எடுத்துக் கூறும். இந்த ஆத்மீக தத்துவங்களை உலகெங்கும் பரப்புவதற்கு பல பாதைகள் தெரிந்த துறவிகளாலேதான் முடியும்"

யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. மண்டபத்தில்நேற்று முன்தினம் யாழ். திவ்ய ஜீவன சங்கத்தினுல் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் கலந்துகொண்ட ஸ்ரீ சுவாமி வெங்கடேசானந்தாஜீ மேற்கண்டவாறு கூறினார். ஸ்ரீ சுவாமி வெங்கடேசானந்தாஜியை திருஞானசம்பந்தஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான சுவாமிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்றார். மேற்படி சங்கக் காரியதரிசி திரு எஸ். கனகரத்தினம் வரவேற்புப்பா பாடினார். சுவாமி வெங்கடேசானந்தாஜி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

எமக்கு கடவுளை மறைக்கும் முதலாவது எதிரி அகந்தையே. இந்த அகங்காரத்தை ஒழிக்கும் ஒரே சாதனம் யோகமாகும். நாம் கோவில் விக்கிரகத்துக்குப் பூசை செய்கிறோம். விக்கிரகம் அசையாமல் அப்படியே இருக்கிறது. நாம் விக்கிரகத்தை வலம்வந்து நமஸ்கரிக்கிறோம். அந்த விக்கிரகம் எம்மைச் சிறிதேனும் கவனித்து மகிழ்ச்சியடையாமல் கல்லாக இருக்கிறது. எவ்வளவு அடக்க ஒடுக்கத்துடன் நாம் பணிந்து பூசை செய்தாலும் விக்கிரகம் எமக்கு ஒருநன்றிகூட அப்பொழுது தெரிவிப்பதில்லை. அதை நாமும் அந்தநேரம் எதிர்பார்ப்பதில்லை. நாம் எப்படி அவ்விக்கிரகத்தின் நன்றியை எதிர்பாராமல் பூஜை செய்கிறோமோ அதே போன்று நாம் நன்றியையும் பலனையும் எதிர்பாராமல் பிறருக்குச் சேவை செய்ய வேண்டும்.

எத்தனைபோபேர் புகழுக்காகவும், வருமான வரியை அடிப்படையாகக் கொண்டும் தாராளமாகத் தர்மம் வழங்குகின்றனர். இப்படிப்பட்ட பலனையும், புகழையும் எதிர்பார்க்கும் சேவைகள் பலனற்றவை. நாம் ஒவ்வொருவரும் குரு சேவையின்மூலம் ஆத்மீக சிந்தனைகளை அடையலாம். தினமும் ஜீவன சேவையில் ஈடுபட்டால் எமது அகங்காரம் குறைந்துகொண்டே போகும். பெரும் மகான்களுக்குச் செய்யும் சேவைகளின் மூலம் தன்னை மறக்கும்நிலையை ஒவ்வொருவரும் அடையவேண்டும்."

"சிலர் தன்னையே மறக்கும் சித்தநிலையை அடைவதற்காக தாடியையும், தலைமயிரையும் வளர்த்துக் கொள்கிறார்களெனினும் சிலர் அந்தத் தாடிக்கும் எண்ணை பூசி, வாரி அழகுபடுத்திக் கொள்ளுகிறார்கள். நான் எனது என்னும் அகங்காரத்தை விடு செய்வதெல்லாம் எனக்கு அப்பால்பட்ட ஒரு சக்தி, அந்த சக்தியாகிய கடவுள் என்னை ஒரு கருவியாக்கி என் மூலம் நல்லதெல்லாவற்றையும் செய்விக்கிறது. அந்த சக்தியே என்னை ஆட்டிப்படைக்கிறது என்ற எண்ணத்தை எல்லோரும் மனதில் கொண்டு பொது சேவைகளையும், தொண்டுகளையும் தாரளமாகச் செய்து மனம் என்னும் குரங்கை அடக்கி பிறவிப்பயனை அடைய வேண்டும்" என சுவாமிகள் கூறினார்.

ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் சுவாமி விவேகானந்தரின் இருபத்தியையும், அவரது வாழ்க்கை வரலாறுகளையும் எடுத்துக் கூறினார்.

திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் இவ்வரவேற்புபசாரம் நிகழ்ந்தது. [வி. நி]

## இன்றைய பலன்

19-12-67
செவ்வாய்க்கிழமை
மார்கழி மீ 4 உ

நட்சத்திரம்-புனர்பூசம் காலை 6-42 மேல் பூசம்.

திதி- துதியை காலை 6-52 மேல் திருதியை

சுபநேரம்- 10-53—12-23.

ராகுகாலம்- 3-23—4-53.

மேஷம்- உத்தியோகநாள் உயர்த்தநோக்கு.
ரிஷபம்- பொருள் வரவு புண்ணிய விருப்பு.
மிதுனம்- ஆசை அலைகள் அமைதிக்கு வேட்டு
கடகம்- தவருன பாதை தலைகுனிய நேரிடும்.
சிங்கம்: அறிவுத்தாகம் அறிஞர் உதவி.
கன்னி- காதலும் மோதலும் கைகோர்த்து வரும்.
துலாம்- மனையலங்காரம் மந்தகாசவாழ்வு.
விருச்சிகம்- மக்கள் நலன் மதிப்பும் உயரும்
தனுசு-பிரயாணச் சிந்தை நினைவின் நிழலாட்டம்.
மகரம்- தாம்பத்தியச்சிறப்பு தனமுமுண்டு.
கும்பம்- நம்பிக் கெடுதல் நஷ்டமடைதல்.
மீனம்- தந்தைவழி ஆதரவு இறைவழிநாட்டம்.

சோதிடக் கலாநிதி
[illegible]

## துறைமுக ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. ஏ. ஜே. சபாரத்தினம் கூறினார்.

நாணயமதிப்புக் குறைந்ததினால் தொழிலாளர் தமது சம்பளத்தில் உயர்வுகோரினால் அதுவிஷயத்தில் உதவி அளிக்கத் தம் தயாராயிருப்பதாயும் அரசாங்கத் துறைமுகங்களிலும் பார்க்க இங்குள்ள துறைமுகங்களே மிகக்குறைந்த செலவில் சரக்குகளை இறக்குவதாயும் சமாசத்திற்கு சேரவேண்டிய 2 லட்சம் ரூபாவையும் இரு வாரத்துக்குள் பெற்றுத் தருவதாயும் திரு சபாரத்தினம் கூறினார்.

துறைமுகங்கள் தேசியமயமாக்கப்படுமுன்பு கூட்டுறவுச் சமாசம் ஒரு நாளைக்கு 600 தொன் சரக்கை இறக்குமதி செய்தது. ஆனால் தேசியமயமாக்கப்பட்டபின்பு 250 தொன் சரக்கையே இறக்குமதி செய்துவருகிறது. எனவே தேசியமய மாக்கப்பட்டுள்ள துறைமுகங்களிலும் பார்க்க கூட்டுறவு அடிப்படையில் இயங்கும் துறைமுகங்களே திறம்படச் செயல்படுகின்றன. என கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. பி. ஏ. சில்வா சொன்னார்.

கொழும்புத் துறைமுகம் போன்ற தேசிய மயமாக்கப்பட்ட துறைமுகங்களில் தொழிலாளர்கள் ஊக்கத்துடன் கடமைபுரிவதில்லை. எனவும் சரக்குகள் இறக்குமதியாகும்போது விலையுயர்ந்த சரக்குவகைகள் பழுதடைந்து வீணுகின்றன எனவும் அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது;-

இற்றைவரை சரக்குவகைகளை 6 தொன்எடையுள்ள கப்பல்களே ஏற்றி வந்தன, இவைகள் காங்கேசந்துறைத்துறைமுகத்துக்கு சரக்குகளை இறக்குவதற்கு வர வசதியாயிருந்தது. ஆனால் இனிமேல் இலங்கைக்கு 12, 13 தொன் எடையுள்ள கப்பல்களே சரக்கேற்றி வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பல்களுக்கேற்ற துறைமுக வசதி இங்கில்லாததால் கப்பல்கள் இங்குவரும் சமயம் பிரச்சனையாயிருக்கும்

சமாசத்தலைவர் திரு. சிக்மறிங்கம் பேசுகையில் சமாசத்தில் 1000 உறுப்பினர்கள் இருப்பதாகவும் ஆனல் கப்பல்கள் இங்கு வருமபோதெல்லாம்காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் யாழப்பாணத் துறைமுகத்திற்குமாக 650 பேருக்கு மட்டுமே வேலை கிடைப்பதாகவும் யாழ்ப்பாணத்திற்குச் சரியான முறையில் கப்பல்கள் அனுப்பப்படுவதில்லை எனவும் ஆகஸ்டிற்குப்பின் கப்பல்கள் இங்கு அனுப்பப்பட வில்லையெனவும் இனிமேல் மாதத்திற்கு ஒரு தடவையாவது கப்பல்களை அனுப்ப வழிவகைகளை செய்துதரவேண்டுமெனவும் வேண்டிக் கொண்டார்.

யாழ் மாவட்ட சுங்க இலாகா உதவி அதிபர் திரு. கே. பி. விமலதர்ம உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. பி. செல்வரத்தினம் ஆகியோரும் பேசினர்.

## ஐயாறன் எழுதுவது

"பெயர், நட்சத்திரமென்ன?" என்று கேட்கிறார் திருக்கேதீச்சரம் குருக்கள். மட்டக்களப்பிலிருந்து ஒரு ஸ்பெஷல் பஸ்ஸிலே வந்த ஒரு வயோதிபத் தாய், "அதெல்லாம் உள்ளே இருக்காரே அவருக்குத் தெரியும். சும்மா அர்ச்சனை செய்யுங்க" என்று அந்தத் தாய் கூறியதைக் கேட்டு, முதலில் அர்ச்சனைக்குக் கொடுத்த ஓர் அதிகாரி திடுக்கிட்டுப் போனார். அவர் படித்தவர். அனுபவஸ்தர். படிப்பில்லாத அந்தத் தாய்க்குஉள்ள தெய்வ நம்பிக்கையும் பண்பும் தமக்கில்லையென்று அதிகாரி என்னிடம் சொல்லி ஏங்கினார்!

ஃ ஃ ஃ

"பாலாவிக்குச் செல்ல இதுதானே வழி" என்று அதே பஸ்ஸில் வந்த மற்றொரு தாய் கேட்கிறார். அதுதான் வழியென்று தெரிந்து கொண்டதும், கையெடுத்து தலைக்குமேல் குவித்து தீர்த்தத்தை நோக்கி வணங்கி, 'அப்பு அப்பு' என்ருர். மேலே பேசமுடியவில்லை. திருக்கேதீச்சரம் வந்து தரிசிக்க வேண்டுமென்று அந்த அன்னைக்கு எவ்வளவு காலமாக ஆர்வம் இருந்ததோ. பல குடும்பங்கள் சேர்ந்துவந்து பக்தியுடன் கும்பிடும் காட்சியைக் கண்டேன்.

கிழக்கையும், வடக்கையும் தெய்வம் எவ்வளவு மேலாகப் பிணைக்கிறது! மக்களையும் நாட்டையும் ஒற்றுமைப்படுத்தும் சக்தி, தெய்வத்துக்கு எவ்வளவு இருக்கிறது! அரசியல்வாதிகள் எவ்வளவு கரடியாகக் கத்தினுலும் இவ்வித உண்மை ஒற்றுமை ஏற்பட முடியுமா? இதெல்லாம் பார்க்க மிக நம்பிக்கையும மகிழ்ச்சியுமளித்தது.

ஃ ஃ ஃ

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தின் ஆதரவில் சிறப்பாக நடைபெற்ற திருவாசகவிழாவிலே இவ்வாண்டில் ஒரு புதுமை, ஒரு இஸ்லாமிய அன்பர் "திருவாசகம் மனிதனுக்கு ஒரு வாசகம்" என்ற தலைப்பில் பேசிய பேச்சாகும்.

"கௌரியம்பாள் சைவர்களுக்கு மட்டுமன்றி உலக மக்கள் அனைவருக்குமே அருள்செய்யக் காத்திருக்கிருர்" என்று அவர் கூறியதைக் கேட்டபோது, என் செவிகளை நம்பமுடியவில்லை. அவர் சைவ உணவே உண்பவராம். தமிழ் முழக்கம், திரு. எம். பி எம். முகம்மது காசிம் ஆலிம், இந்த விழாவிலே கலந்துகொண்டு பேசியதும் அவரைப் பேச ஒழுங்குசெய்ததும் பாராட்டத்தக்க துணிச்சலான காரியம்.

ஃ ஃ ஃ

தென்னுபிரிக்கா, மொரீஷஸ், ரீயூனியன், பிஜி. ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் சென்ற ஏழு வருடமாக திவ்யஜீவனசபையின் சார்பாகத் தொண்டாற்றிவிட்டு, இந்தியா திரும்பும் வழியில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஸ்ரீ சுவாமி வேங்கடேசானந்த மகாராஜ், தஞ்சையைச் சேர்ந்த ஒரு வைணவராம். அவர், யாழ்ப்பாண வை. எம். ஸி. ஏ. மண்டபத்தில், பேசுமுன் 'நமசிவாய' என்ற சிவமந்திரத்தையே பஜனைபோல் கோஷித்தார். [கிறிஸ்தவ ஸ்தாபனமான அந்த இடத்தில் இவ்வித கூட்டம் நடந்துள்ளதும் வரவேற்கத்தக்க ஒரு புதுமை.]

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் மூழ்கிய ஆஸ்திரேலிய பிரதமர் சடலம் எங்கே?

## தேடுதல் முயற்சி பயன்தரவில்லை

### உலகத்தலைவர்கள் அதிர்ச்சி

கன்பெரா, டிசெ. 18

மீன்பிடிப் பிரயாணமொன்றில் நான்கு நண்பர்களுடன் நேற்று அதிகாலை தமது விக்டோரியா வாசஸ்தலத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, பின்னர் காணமற்போன ஆஸ்திரேலியப்பிரதமர் திரு. ஹரோல்ட் ஹோல்ட் கடலில் நீந்துகையில் மரணமாயிருக்கலாம் என இப்போது ஊகிக்கப்படுகிறது. அவர் உயிருடன் இருப்பார் என்பதில் அவ்வளவு நம்பிக்கை இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முழுவதும்வானம், கடல், நிலம் ஆகியவற்றில் நடத்தப்பட்ட பிரம்மாண்டமான தேடுதல் எவ்வித பயனையும் அளிக்கவில்லை. இத்தேடுதல்முயற்சி, நேற்று நள்ளிரவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பிறகுஇன்று காலை மீண்டும் அது ஆரம்பிக்கப்பட்டது. காலையில் சிறிய மழை பெய்ததாலும், காலநிலை சுமுகமாகவில்லாததாலும், தேடுதல் வேலை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

**உலகத்தலைவர்கள் அதிர்ச்சி**

ஆஸ்திரேலியப் பிரதமர் காணமற்போன செய்தியைக் கேள்விப்பட்ட உலகத்தலைவர்கள் பலரும், ஆச்சரியமும்அனுதாபமும் தெரிவித்துள்ளனர். இச்செய்தி அவர்களுக்குப் பலத்த அதிர்ச்சியை அளித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, புதுடில்லியிலுள்ள ஆஸ்திரேலிய தூதராலயத்திடமிருந்து அடிக்கடி ஆஸ்திரேலியப் பிரதமர்பற்றி விசாரித்துக்கொண்டுள்ளார்.

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத், அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன், மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், மற்றும் பலநாட்டுத் தலைவர்களும் ஆஸ்திரேலியப் பிரதமரின் மறைவு பற்றி விசனம் தெரிவித்துள்ளனர்.

**திரு. ஹோல்ட்**

திரு. ஹோல்ட், 32 வருடங்களுக்கு முன், அரசியலில் புகுந்தார். பிறகுபடிப்படியாக உயர்ந்து ஈற்றில், ஜனவரி 1966-ல் அப்போதைய பிரதமர் சேர். ரொபேட் மென்ஸிஸ், தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றபோது, அப்பதவியில்அமர்ந்தார்.

ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்ட் உயிருடன் இருப்பதில்இப்போது அதிக நம்பிக்கை இல்லாத காரணத்தால், உதவிப்பிரதமரான திரு.மக்கீவன் இடைக்காலப் பிரதமராக நியமிக்கப்படலாமெனத் தெரிகிறது.

## மைசூர் உள்துறை மந்திரி ராஜினமா

மைசூர், டிசெ. 18

மைசூர் உள்துறை மந்திரி திரு. என். வி. ராமராவ், தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

மந்திரியின் ராஜினமா பற்றித் தாம் இன்று இறுதி முடிவு தெரிவிப்பதாக மைசூர் முதல் மந்திரி திரு. நிஜலிங்கப்பா அறிவித்துள்ளார்.

## டஹோமி குடியரசில் இராணுவப் புரட்சி

### ஜனதிபதி பதவி நீக்கம்

போர்ட்டோநெவோ, டிசெ. 18

ஆபிரிக்கக் குடியரசான டஹோமியில் நேற்று நடைபெற்ற ஓர் இராணுவப் புரட்சியில், ஜனதிபதி, பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பதவியிலிருந்த அரசாங்கத்தையும், இராணுவப் புரட்சித் தலைவர்கள் கலைத்துவிட்டுள்ளனர். புரட்சிகர இராணுவ ஆட்சி, தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ளது. இதற்கிடையில், இடைக்கால அரசாங்கமொன்று நிறுவப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

**தளபதி தலைமை**

இந்த இராணுவப் புரட்சியைத் தலைமைதாங்கிநடத்தியுள்ளவர், நாட்டின் இராணுவத்தளபதி திரு. அலி ஆவார். ஜனதிபதியின் வலதுகரமென இவர் கருதப்பட்டு வந்தவராவார்.

**3-வது தடவை**

ஏழு வருடங்களுக்கு முன், பிரெஞ்சுஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்றபின், டஹோமியின் மூன்றாவது இராணுவ புரட்சி இதுவாகும்.

## சீனக் கப்பற் தலைவர் கியூபாவில் தஞ்சம்

ஹவானா, டிசெ. 18

கியூபாவுக்குப் பொருட்கள் கொண்டு வந்த சீனக் கப்பலொன்றின் காப்டன், கியூபாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

அவருடைய கப்பலைச் சேர்ந்த சீனச் சிப்பந்திகள் அவரைத் தாக்கியதன் விளைவாகவே, அவர் இவ்வாது கியூபாவில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கற்காலக கருவிகள் குஜராத்தில் கண்டுபிடிப்பு

அஹமதாபாத் டிசெ.18

குஜராத் ராஜ்யத்தில் புனிதபொருள்ஆராய்ச்சியாளர்கள் கற்காலத்தைச் சேர்ந்த கருவிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

அண்மையில் அவர்கள் இடிந்த ஒரு கட்டிடத்தையும், நுண்ணிய வேலைப்பாடுள்ள கருவிகள் சிலவற்றையும் கண்டுபிடித்தனர்.

**தற்கால சமுதாயம்**

புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் இக் கண்டுபிடிப்புகள்முன்னர் நம்பப்பட்டது போல் காட்டுமிராண்டிகள் பாவித்தன என்ற கருத்தைப் பொய்யாக்கி குஜராத் பகுதியில் தொழில் நுட்பம் வாய்ந்த தொழிற் கலைஞர்கள் வாழ்ந்த நாகரீகச் சமுதாயம் பழங்காலத்தில் இருந்து வந்துள்ளது என்பதை நிரூபித்துள்ளன.

## 6,000 ரூபா வலைக் களவு:

### மூவர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நேற்று முன்தினம் குருநகர் கடற்கரையில் காணமல் போனதாகப் புகார் செய்யப்பட்ட 6000ரூபாய் பெறுமதியான வலைகள் சம்பந்தமாக கரையூர்ப் பொலிஸ்அதிகாரி திரு. ஜே. சூசப்பிள்ளை அதே ஊரைச்சேர்ந்த இறேசன், ரத்னம், சிவன் ஆகிய மூவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். மூவரும் இப்போது றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

குருநகர் கடற்கரையில் மீன்பிடிப்பதற்காக விரிக்கப்பட்டிருந்த தனது வலைகளைக் காண வில்லையென்று. றெக்கிளமேசனைச் சேர்ந்த திரு. கிறிஸ்தோ துரைரத்தினம் என்பவர் பொலிஸுக்குப் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் மேற்படி நபர்களைசந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [வி.நி]

## பீஹார் பி. சோ. அங்கத்தவர்கள் ராஜினமாபிரச்னை

பட்ன, டிசெ.18

பீஹார் அரசாங்கத்திலிருந்து நேற்று ராஜினமாச் செய்த 4 பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் தமது ராஜினமாவை வாபஸ் பெறுவதென இப்போது தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

சீனி ஆலையொன்று மூடப்பட்டதை ஆட்சேபித்து அவர்கள் ராஜினமாச் செய்தனர். ஆனல் பின்னர் பீஹார் முதல் மந்திரி, ஆலையைத் திறக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் பேரில், அரசாங்கத்தில் மீண்டும் சேர அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

## துணைப்பிரதமர் தேசாய் அடிக்கல் நாட்டினர்

பம்பாய், டிசெ. 18

இந்திய துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய். பம்பாய்க்கருகே 100 வார்டுகள்கொண்ட ஹோமியோபதி ஆஸ்பத்திரி ஒன்றுக்கு அத்திபாரக்கல் நாட்டினர்.

இந்த ஆஸ்பத்திரி, ரூபா 15 லட்சம் செலவில் கட்டப்படுகிறது.

## ஒலிம்பிக் விளையாட்டு தென்னபிரிக்கா தடை

மெக்சிக்கோ, டிச.18

தென்னபிரிக்கா அடுத்த ஒக்டோபரில் மெக்சிக்கோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குக் கறுப்பரும் வெள்ளையரும் கலந்த விளையாட்டுக் கோஷ்டியை அனுப்பினலன்றி, ஒலிம்பிக் விளையாட்டுகளில் பங்குபற்றுவதற்குத் தென்னபிரிக்காமீது விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீரழிவு ஆராய்ச்சிக்கு இந்தியா சென்றார்

புன்னலைக்கட்டுவன், திங்கள்

கடந்த 30 ஆண்டுகளாக நெல்லியடியில் பிரபல வைத்தியரா(க்)க் கடமையாற்றிய டாக்டர் பயஸ் பஸ்தியாம்பிள்ளை நீரழிவு நோய் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக நேற்றுமுன்தினம் விமானமூலம் சென்னை புறப்பட்டார்.

## ரோமிலிருந்து நாடு திரும்ப கிரீஸ் மன்னர் நிபந்தனை

### இராணுவ ஆட்சியாளர் ஏற்கும் அறிகுறி இல்லை

அதென்ஸ், டிசெ. 18

கிரீசில் ஆட்சியிலுள்ள புரட்சி இராணுவ ஆட்சியாளர் ரோமிலிருந்து கிரீசுக்குத் தாம் திரும்புவதற்கு கிரீஸ் மன்னர் விதித்துள்ள சில நிபந்தனைகளை நேற்று ஆராய்ந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னர் சமர்ப்பித்துள்ள நிபந்தனைகள் பற்றி உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

**விட்டுக்கொடுக்க மாட்டார்கள்**

ஆனல், மன்னரின் நிபந்தனைகளுக்கு இராணுவ ஆட்சியாளர் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதும், புதிய அரசியற் சாஸனம் ஒன்றை உருவாக்குவதும் வன்னரின் நிபந்தனைகளில் அடங்கியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**பிரார்த்தனை**

இதற்கிடையில், ரோமில் உள்ள மன்னர் கொன்ஸ்டன்டைனுக்கும், அவரது ராணி மாகிக்கும், கிரீசில் பல இடங்களிலும், மக்கள் பிரார்த்தனைகள் நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

## சிறுவன் தற்கொலை

புன்னலைக்கட்டுவன். திங்கள்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவரான மாணிக்கம் ரவீந்திரன் என்னும் 13 வயதுச் சிறுவன் கிரிமிநாசினி அருந்தி தற்கொலை செய்த பரிதாபச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வதிரியில் நடைபெற்றுள்ளது. மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் வழியிலேயே மரணமானர்.

தன்னை விஞ்ஞானப்பகுதிக்கு அனுமதிக்காத காரணத்தால் இவர் மிகச்சோர்வடைந்து சில தினங்கள் இருந்தாரென விசாரணையின்போது தெரியவந்தது.

பருத்தித்துறைமரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'எதையும் சாதிக்கும் திறன்படைத்தவர்கள்'

## பெண்களுக்கு உடுப்பிட்டி எம். பி. புகழ்மாலை

உடுப்பிட்டி, திங்கள்

"தமிழினம் பலநூற்றாண்டு காலமாக இசையோடு பழகிய சமுதாயமாகும். தமிழினம் பிறப்பிலுஞ்சரி இறப்பிலுஞ்சரி இசையைத் தன்பால்கொண்டது. பிறக்கும் குழந்தை 'ஆ' என்ற ஒலியுடனே அழுகின்றது. இறந்த வீட்டில் ஒப்பாரியும் இசையுடனே பாடப்படுகின்றது. தமிழோடுஇசைபாடும்பெருமை பெற்ற எம் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடு பல்வேறு நாட்டினராலும் போற்றப்படுகின்றது பண்டைய தமிழ்நாட்டை அரசாண்ட சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களும் தமிழ்மொழியைக் கண்ணெனப் போற்றிப் பாதுகாத்து வந்தனர். அத்துடன் புலவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கலைத்துறையில் ஊக்குவித்து வளர்த்தனர்' எமது மக்களிடையே கலையார்வம் குன்றி வருவதே எமது இன்றைய இழிநிலைக்குக்காரணம். தமிழ்மொழியின் புனிதம்கெட்டு. மங்கி மறைந்துவிடாது நாம்முயல வேண்டும் வடபகுதி சகல துறைகளிலும் கடந்த 15 ஆண்டுகளுக்கிடையில் மறுமலர்ச்சி யடைந்துள்ளமையைக் காணக்கூடியதாயுள்ளது."

மேற்கண்டவாறு நெல்லியடி மகாத்மா தியேட்டர் மண்டபத்தில் நடைபெற்ற வடமராட்சி மாதர் கலா மன்றத்தின் முதலாவது ஆண்டுவிழாவில் பேசுகையில் பருத்தித்துறை எம். பி. திரு- கே. துரைரத்தினம் கூறினர். இவ்விழாவிற்குத் திருமதி சத்தியபகவதி ஸ்ரீபத்மநாதன் தலைமை வகித்தார். மன்ற மாணவிகளின் தேவாரத்துடன் விழா ஆரம்பமாயது.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

"பெண்கள் எதையும் தாங்கும் வல்லமை படைத்தவர்கள். அத்துடன் எதையும் சாதிக்கும் திடமும் பெற்றவர்கள். பெண்களுடைய ஆட்சி எமதுநாட்டிற்கு புதியதல்ல. இன்று பெண்கள் பலபடி உயர்ந்துவிட்டார்கள். அவர்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்புமே மாதர்களின் முன்னேற்றத்திற்குக் காரணம். இன்று தமிழினம் அனுபவித்த இன்னல்களுக்குக் 'கலையே' சிறந்த வைத்தியமாகும். எமது சமுதாயம் இன்று நேற்றைய சரித்திரப்புகழ் பெற்றதல்ல, பல தலைமுறைகளாக வாழ்ந்து புகழ்பரப்பியது தமிழ்ச் சமுதாயம்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. இரத்தினசிங்கம் பேசுகையில், பெண்களின் திருநாளான இப்புனித தினத்தில் மாதர் விழா நடாத்துவது பொருத்தமானது. ஒரு வருடத்தில் இம்மன்றம் துரித முன்னேற்றமடைந்துள்ளது பெருமையளிக்கிறது. இம்மன்றத்திற்கு எம். பி.க்கள் அரசாங்கநிதி பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றார்.

மன்றக் காரியதரிசியான திருமதி விஜயலட்சுமி பேசுகையில், 'சமய, சமூக, கலைத் துறைகளில் இன்றைய சிறுர்களாகவிருக்கும் எதிர்காலத் தலைவர்களை ஈடுபடுத்துவதே எமது இலட்சியமாகும். பெண்கள் அடிமைகளாக இருந்த காலம் மலையேறிப்போய்விட்டது. இன்று பெண்கள் ஆண்களுடன் சரிசம அந்தஸ்துப் பெறுமளவிற்கு முன்னேறியுள்ளனர். பெண்கள் அரசாங்க உத்தியோகங்களை நம்பியிராது பொதுச்சேவையில் ஈடுபடவேண்டும்' என்று தெரிவித்தார்.

செல்வி தங்கராணி கனகசபை, திருமதி சூரியகுலேந்திரன் ஆகியோர் இன்னிசை விருந்தளித்தனர். மன்ற மாணவிகளின் ஏழு நடனங்களும், சங்கீதம் மற்றும் பால்மணம் மாருதபாலகர்களின் கும்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# இந்து தருமசாதனங்கள், நிதிகள் பற்றி விபரங்கள்

## அறிவிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, திங்கள்

இலங்கை வாழ் இந்துக்களால் சமயம், கல்வி, கலாச்சாரம் ஆகியனவற்றின் முன்னேற்றத்தைக் குறித்து இலங்கையிலோ இந்தியாவிலோ தாபிக்கப்பட்ட பல இந்து தரும சாதனங்களை நிதிகளையும் பற்றிய சகல விபரங்களையும் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கவேண்டுமென அகில இலங்கை இந்துமாமன்றத்தின்சார்பில் மன்றத் தலைவர் இளைப்பாறிய நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் கூடிய ஒரு விசேட கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அச்சாதனங்களுக்கும் நிதிகளுக்கும் உரிய சொத்துக்களையும் எவரும் பராதீனப்படுத்துவதையும் அவற்றிலிருந்து வரும் வருமானத்தை அதற்குரிமையில்லாத எவரும் அனுபவித்து அழிப்பதையும் தடுத்து அவற்றைப் பேணுவதே மன்றத்தின் நோக்கமாகும். விபரங்களை சைவசிகாமணி பொன். ஸ்ரீஸ்கந்தராசா 185/19 ஹவலக் ரோட், கொழும்பு—5 என்றவிலாசத்துக்குயாவரும் எழுதி அறிவிக்கலாம்' என்று சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

## குடியேற்றவாசிகளின் குறைகள்

யாழ்ப்பாணம், செவ்

முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் குடியேற்றப்பட்ட விவசாயிகள் பலர் வசதிக்குறைவினால் கஷ்டமனுபவிப்பதாக வடபகுதி அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் தெரிவித்துள்ளனர்.

தாம் பிரதான வீதியில் இருந்து நான்கு மைல் உள்ளே கொடிய விலங்குகள் வாழக்கூடிய காட்டுப் பிராந்தியத்தில் வாழ்வதாகவும் அப்பகுதியில் பல நாள் பாடுபட்டுத் தமக்குக் கொடுக்கப்பட்ட 5 ஏக்கர் நிலத்தை விளை நிலமாக்கியுள்ளதாகவும், ஆனாலும் தமக்கு எவ்வித வசதிகளும் செய்துதரப்படவில்லை என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள குடியிருப்பாளரின் நிலங்களில் நடுவதற்கு அரசாங்கத்தினரால் வழங்கப்பட்ட தென்னங்கன்றுகளைப் பிரதான வீதியில் இறக்கிவிடுவதனால் அவற்றை அக்குடியிருப்பாளர் 4 மைல் தூரத்திற்குத் தூக்கிச் செல்லவேண்டியிருக்கிறதாம்.

## நாத்தாண்டிய உப தேர்தல்

கொழும்பு, திங்கள்

நாத்தாண்டிய உபதேர்தல் பிரசாரத்துக்காக டிசம்பர் 22-ம் திகதி பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அத்தொகுதிக்கு விஜயம் செய்வார்.

இவ்வார இறுதியில் மாஸ்கோவிலிருந்து வந்துசேரவிருக்கும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இங்கு உடனடியாகவே பிரசாரத்தில் கலந்துகொள்வார் எனத் தெரிகிறது.

யூ.என்.பி.யைச் சேர்ந்த திரு. கியூபெர்னண்டோவும் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. புறட்ரஸ் சருவும் இத் தொகுதியில் போட்டியிடுகின்றனர்.

## சமாதானமாகப் போகச் சம்மதம்

### நீதிபதி அனுமதித்தார்

சாவகச்சேரி, திங்கள்

"கலவரம் தோன்றுவதற்கு காரணமான சந்தேகம், பொருமை போன்றவற்றை விலக்கி அனைவரையும் அன்பாகப் பேணவேண்டும். அத்துடன் தனதும் தன்நாட்டினதும் நலன்கருதி உழைக்கவேண்டும். இதனால் நாடும் மக்களும் எவ்வித கஷ்டமுமின்றி அமைதியாக வாழமுடியும்."

சாவகச்சேரியை அடுத்துள்ள தனங்கிளப்பில் இரு கோஷ்டியினரிடையே ஏற்பட்ட கலவரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டசுமார் 18 பேரில் 6பேருக்கிடையேயானவழக்குசாவகச்சேரி பதில்மாஜிஸ்திரேட் திரு, எஸ். கே. திரவியநாயகம் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது இரு பகுதியினரும் சமாதானமாக வாழ்வதாகக்கூறி வழக்கை வாபஸ் பெறுவதாக பதில் மாஜிஸ்திரேட்டிடம் கூறியபோது மாஜிஸ்திரேட் மேற்கண்டவாறுகூறி 6 பேருடைய கையொப்பங்களையும் பதித்தபின் செல்ல உத்தரவிட்டார்.

மேலும் இம்மாதம் 18-ந் திகதி இக்கோஷ்டியினருள் எரு பகுதியினரது வழக்கு இருப்பதாகவும் அதுவும் அன்று சமாதானமாகச் செல்வதாகக்கூறியதின்பேரிலேயே அனுமதி வழங்கப்பட்டது.

## விசாரணை ஒத்திவைப்பு

குரும்பசிட்டி, திங்கள்

மாமியைக் கொலை செய்ததாக மருமகள்மீது குற்றம் சுமத்தித் தொடரப்பட்டுள்ள வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. நெத்தசிங்கா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இறந்தவரைப் பிரேதபரிசோதனை செய்த டாக்டர் எஸ். குலத்துங்கம் சாட்சியமளித்தார். பொலிஸ் சார்ஜண்ட் பி. தாமோதரம். ஏ. நடராசா ஆகியோர் சாட்சியமளித்தனர். மேல்விசாரணையை நீதிபதி இம்மாதம் 20-ந் திகதிக்கு பின் போட்டுள்ளார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் 9-ந் திகதி வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த அப்பையாபிள்ளை நாகம்மாவை இரும்புக் கம்பியால் அடித்துக் கொலை செய்ததாக அம்பிகைபாகன் மீனாட்சி என்பவர்மீதுகுற்றம் சாட்டி சங்கானைப் பொலிசார் இவ்வழக்கை தொடர்ந்துள்ளனர்.

எதிரி சார்பில் அட்வக்கேட் ... அவர்கள் (நி) ஆஜராகியுள்ளார்.


# மெய்கண்டான் வழங்கும்

# ரூ. 1000-00

## பெறுமதியான 168 பரிசுகள்

**சித்திர கலா-** என்ற சொல்லில் சித்திரமும் கலையும் பிணைந்திருக்கின்றன. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும்மற்றெருபுதியகலண்டரானசித்திர கலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

**குருபரன்-** என்ற பதத்தில் லீலா விநோதனுன பரனுக்கு குருவாகிய குமரன் என்றபொருள் பொதிந்திருக்கிறது. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும் மற்றுமொரு சிறிய சைஸ் பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

தமிழுலகில் முதன் முதல் சித்திர சகிதமான திருக்குறட் கலண்டர்களை வெளியிட்டு வெற்றிகரமாக விற்பனை செய்து வருபவர்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

மெய்கண்டான் திருக்குறட் கலண்டரில் சமய ஞானிகள், உத்தமப் பெரியார்கள், தெய்வப் புலவர்கள், தேசத் தியாகிகள் போன்ருேரின் சித்திரங்களே இடம்பெற்று வருகின்றன. அறிஞர்களின், பெரியோர்களின், பிரமுகர்களின் தரத்திற்கேற்பவே மெய்கண்டான் திருக்குறட்கலண்டர்களில் படங்கள் பொறிக்கப்படுகின்றன.

**இது தவிர**

முழுக்க முழுக்க, பக்கத்துக்குப்பக்கம், சித்திரங்களைக் கொண்ட [நம்பர்2, நம்பர்3] தனிச் சித்திரக் கலண்டர்களாக மலிவு விலையில், இரண்டு புதிய கலண்டர்களையும் இவ்வாண்டு முதல்வெளியிடுகிருர்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

விவரங்களைத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? இப்போது இங்கு தரப்படும் வினுவுக்கு ஏற்ற விடையைத் தெரிந்தனுப்பி பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**வினு: "சித்திரகலா"—"குருபரன்" என்ற அழகிய சொற்களை மெய்கண்டான் ஸ்தாபனத்தார் பிரயோகித்தால் அவை எதைக் குறிக்கும்?**

கீழே தரப்பட்டிருக்கும் 6 விடைகளில் பொருத்தமான 2 விடைகளை ஒரு போஸ்கார்ட்டில் எழுதி அனுப்பி வையுங்கள்.

விடை 1. சித்திர கலா — ஒரு நடிகையின் பெயர்.
விடை 2. சித்திர கலா — ஒரு நடன மன்றத்தின் பெயர்.
விடை 3. சித்திர கலா — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய பெரிய "சைஸ்" கலண்டரின் பெயர்.
விடை 4. குருபரன் — பழநி முருகனின் திருப்பெயர்.
விடை 5. குருபரன் — ஒரு தமிழ்ப் பத்திரிகையின் பெயர்.
விடை 6. குருபரன் — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய சிறிய "சைஸ்" மலிவு விலைக் கலண்டரின் பெயர்.

## பரிசு விவரங்கள்

1 ம் பரிசு ரூ. 100.00 ரொக்கம்
2 ம் பரிசு ரூ. 50.00 ரொக்கம்
3 ம் பரிசு ரூ. 25.00 ரொக்கம்

மற்றும் 165 பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5/- பெறுமதியான பொருட்கள்.

சரியான விடை அனுப்புபவர்களின் பெயர்கள் குலுக்கி எடுத்துப் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறுபவர் விவரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

**மெய்கண்டான் பிரஸ் லிமிட்**
161, செட்டியார் தெரு,
தொலைபேசி: 79141 கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

# மனேஜர் தேவை

விசுவமடுக்குளம் படித்த வாலிபர் திட்ட ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு மனேஜர் தேவை. 2-1-68க்கு முன்பாக காரியதரிசி, விசுவமடுக்குளம், பரந்தன் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மூலையில் மனேஜர் விண்ணப்பம் என்று எழுதி அனுப்பவும்.

**தகமைகள்**

1. வயது:- 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட தராதரப் பத்திரத்துடன் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
3. 2 வருடத்திற்கு மேற்பட்ட வியாபார அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
4. உழவு யந்திர லைசென்ஸ் வைத்திருந்தால் விரும்பத்தக்கது.

**சம்பளம்**

மாதம் ரூபா 125/- (சகல படிகளும் உட்பட திறமைக் கேற்றபடி சம்பளம் கூட்டிக் கொடுக்கப்படும்.)

**பிணை**

ரூபா 1500/- ரொக்கப் பிணை ரூபா 3000/- ஆதனப் பிணை கட்டுதல் வேண்டும்.

காரியதரிசி,
விசுவமடுக்குளம் ப. வா.,
ப. நோ. கூ. சங்கம்.
378



### 1968 பாடசாலையில் சேர்தல் (கப்புலன் செவிப்புலன், வாய்ப்பேச்சு இழந்த பிள்ளைகள்)

கைதடி, நவில்ட் செவிடர் குருடர் பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு 21-1-'68வரை விண்ணப்பக் கடிதங்கள் அதிபருக்கு அனுப்பி வைக்கலாம். இலங்கையில் இப்பாடசாலை ஒன்றே தமிழ் செவிடர் குருடர் பிள்ளைகளுக்காக இயங்குகிறது. 380



### யாழ்ப்பாண மாநகரசபை

**1968-ம் வருடத்திற்குரிய இறைச்சிக் கடைகளுக்கும், கருவாட்டுக் கடைகளுக்குமான குத்தகை**

பெரியகடையில் உள்ள 2, 4, 7-ம் இலக்க ஆட்டிறைச்சிக் கடைகளுக்கும், 12, 13, 14, 18-ம் இலக்கக் கருவாட்டுக் கடைகளுக்கும், சின்னக்கடையில் உள்ள 4-ம், 6-ம் இலக்க மாட்டிறைச்சிக் கடைகளுக்கும் 1968-ம் வருட குத்தகைக்கு. 26-12-67-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 4-00 மணி வரை மாநகர ஆணையாளரால் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

26-12-67 பி. ப. 2-00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

மேற்கொண்டு தேவைப்படும் தகவல்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஹட்சன் செல்வராசா,
மாநகர ஆணையாளர்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
12-12-67. 379



**SALE**

Valuable Commercial Building Suitable for Industry or Business 1 1/2 Lachams Land fully built with all modern conveniences, and Three Phase Electricity Supply Main Street, Rs. 60,000/-.

Apply:
V. Navaratnarajah,
Crown Proctor,
Jaffna.



**SALE**

Austin Farina A. 55 Mark II 3 Sri 7000 Series Show-room condition with extra fittings. Well maintained offers over Rs. 33,500/-.

Rajan Iron Works,
Stanley Road,
Jaffna.


## 11 கோல்களால் வெற்றி

புன்னாலைக்கட்டுவன் ஞாயிறு

அல்வாய் மனோகரா நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வல்வெட்டித்துறை உதய சூரியன் விளையாட்டுக் கழகமும் நெல்லியடி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டபோது நெல்லியடிக்கோஷ்டி 11-1 கோல்கள் போட்டு வெற்றியீட்டியது.

திரு. கே. பாலேந்திரா மத்தியஸ்தம் வகித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 19-12-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 10-00 நேயர் விருப்பம்.

# வெள்ள நிவாரண நிதிக்கு ஜி. ஜி. உதவி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வெள்ள நிவாரண நிதிக்கு யாழ்ப்பாணம் லையன்ஸ் கிளப் நேற்று ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இந்நிதிக்கு 2000 ரூபாவும், 100 புசல் அரிசியும், வழங்குவார்கள் என்றும் வெள்ள நிவாரண கமிட்டிக்கு இவை அனுப்பிவைக்கப் படுமென தமிழ் காங்கிரஸ் காரியதரிசி திரு. தா. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல பொது நல சங்கங்களும், வர்த்தகர்களும், வெள்ள நிவாரணத்திற்கு நிதி அனுப்பமுன் வந்துள்ளதாக தெரிய வருகிறது.

அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள நிதி போதாததால், தனிப்பட்டவர்களும் சங்கங்களும் நிதியளிக்குமென எதிர்பார்ப்பதாக, வெள்ள நிவாரண உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

## நோயாளிகள் ஏமாற்றம்

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த இரு நாட்களாக நோயாளிகள் சென்று மருந்து எடுக்க முடியாமல் திரும்பினார்கள். மாலை நேரம் டாக்டர்கள் வராமையாலே இவ்வித நிலை ஏற்பட்டதாம். இதனால்நோயாளர்கள் பெருத்த கஷ்டத்துக்கும் அவதிக்குமுள்ளாகியுள்ளனர். இது சம்பந்தமாக மேலிடத்துக்கும் புகார் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## ஐயாறன்

[2-ம்பக்கத் தொடர்ச்சி]

நமது அகங்காரம் அல்லது அபிமானம் நீங்கவேண்டிய அவசியத்தைப்பற்றி மிக ருசியாகப் பேசினார். அவர் நேற்றுக்காலை திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கிருந்து மலைநாடு முதலிய இடங்களுக்குச் சென்று கொழும்பு மூலம் இந்தியா திரும்புவார்

அந்நாடுகளிலுள்ள தமிழர்களின் நிலைமையைப் பற்றி விசாரித்தேன். பல ருசியான விஷயங்களைத் தெரிவித்தார். சைவ ஆதீனங்கள், சைவ சித்தாந்தப் பிரசாரகர்களை அங்கு அனுப்பவேண்டியது மிக அவசியமென்றும் அதை வற்புறுத்தித் தூண்டுவதே தாம் இந்தியா செல்வதின் முக்கியநோக்கமென்றும் சொன்னார்.

பூரண தேஜசுடன் பொலியும் அந்த இளம் துறவி மண்டபத்துக்கு வந்ததும் அங்கு அமர்ந்திருந்த ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளின் பாதம் தொட்டு வணங்கினார்! எவ்வளவு எளிமை!

ஃ ஃ ஃ

வெய்ய வினையா யவ் வடியார் மேலொழித் தருளி
வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்,
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான் திருக்கேதீச்சரத்தானே.
— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

[திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளி இருக்கின்ற பெருமான், தன் அடியவர் மேல் உள்ள கொடிய வினைகளை முற்ற ஒழித்து, நில உலகத்தில் உள்ளார் உணர்ந்துமகிழுகின்ற கடல் சூழ்ந்த மாதோட்டம்எனும் நகரத்தில் பாம்புபோலும் இடையினை உடையவளாகிய கௌரியம்பாளோடு பாலாவியாற்றின் கரைமேல் சிறந்த சடைமுடியை யுடையவராகக் காணப்படுகின்றார்.]


**விற்பனைக்கு**

கைத்தொழிலுக்கோ அல்லது வியாபாரத்துக்கோ பொருத்தமான மதிப்புள்ள வர்த்தக கட்டடம் எல்லா நவீன வசதிகளுடன் பிரதான வீதியில் விற்பனைக்குண்டு. ஒன்றரை லாச்சம் காணியில் உள்ளது. மூன்று கட்ட மின்சாரவசதியுமுண்டு. ரூபாய் 60,000/-

விண்ணப்பிக்கவும்:
வி. நவரத்தினராஜா,
முடிக்குரிய வழக்கறிஞர்,
யாழ்ப்பாணம்.



**விற்பனைக்கு**

ஒஸ்டின் பரீனா ஏ. 55 மார்க் II 3 ஸ்ரீ 7000 தொடர். புத்தம்புதிய நிலையில் மேலதிக இணைப்புகளுடன் நன்ருகப் பாவிக்கப்பட்டது. ரூபாய் 33,500/-க்கு மேல் விலை கோரப்படுகிறது.

ராஜன் ஐயேண்வேர்க்ஸ்
ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



**தேவை**

பினன்ஸ் கொம்பனிக்கு (Finance Company) ஆள் தேவை. தராதரப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் அறவிடப்பட மாட்டாது. விளம்பரம் இல. 2191 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 2191



**காணவில்லை**

15-12-67ஆம் தேதி 2 மணியளவில் யாழ்-கச்சேரி பஸ்வண்டியில் திரு. எஸ். இராமலிங்கம் என்பவருக்கு உரிய மிக முக்கியமான குறிப்புகள் அடங்கிய ஒரு பெட்டி தவறிவிட்டது. இவைகளை எடுத்தவர்களேனும், பிறரேனும் நேரிலோ அல்லது பிறர்மூலமோ 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்தால் மிகுந்த சன்மானம் நன்றியறிதலுடன் கொடுக்கப்படும். 2581



## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [கொழும்பு]
விஜயா [சுட்டுநகர்] — ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] — விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பண்டாரவளை]



சந்திரபாபு—கே. ஆர். விஜயா
சாவித்திரி - மனோகர் - விஜயஸ்ரீ
ராஜன்- "சோ" நம்பிராஜன்
ஸ்டன்ட் சோமு-எம். ஆர். ஆர். வாசு
ஆகியோர் நடித்த விஸ்வபாரதியின்

# தட்டுங்கள் திறக்கப்படும்

திரைக்கதை, டைரக்ஷன்: ஜே. பி. சந்திரபாபு — இசை: எம். எஸ் விஸ்வநாதன்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
ரவிச்சந்திரன் — ராஜஸ்ரீ
நடித்த
**காதலிக்க நேரமில்லை**



**நியூ காலிங்கஸ்** [இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
மனோகர் - விஜயலட்சுமி
நடித்த
**வல்லவனுக்கு வல்லவன்**



**REGAL** JAFFNA
Daily at 10-30 A. M.
4-45, 7-00 & 9-45 P.M.
SEAN CONNERY
AS Agent 007
in
**GOLDFINGER**



**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Fraukie Avalon
in
BIKINI BEACH
[Color & Scope]







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணம் வழங்குவதில் காரியாதிகாரிகள் சுறுசுறுப்பு

## கோப்பாயில் 2868 பேர் வீடிழந்தனர்

யாழ்ப்பாணம், திங்கள்
கோப்பாய் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் காரியாதிகாரி சமூகசேவை இலாகாவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

கோப்பாய் பகுதியில் 7536 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 37,680 பேர்களுக்கு இலவச மாவு வழங்கப்பட்டுள்ளது. 2868 குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. சிதம்பரப்பிள்ளை நேற்று அப்பகுதி கிராம சேவகர்களை அழைத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை தயாரித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மற்றும் காரியாதிகாரிகளும் விபரங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இம்மாத இறுதிக்குள் விபரங்கள் தயாரிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**தெல்லிப்பழை, சுன்னாகம், உரும்பராய் பகுதியில்**

# நால்வர் கைது

குரும்பசிட்டி, ஞாயிறு
சுன்னாகம் பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் திரு. குணரத்தின தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் தெல்லிப்பழை, சுன்னாகம், உரும்பராய் ஆகிய பகுதிகளில் வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை நடத்தினர். கொள்ளை லாபம் அடிக்கும் நோக்கத்துடன் கட்டுப்பாட்டு விலைகளைவிட கூடுதலான விலைக்கு சில அத்தியாவசிய உணவு மற்றும் பாவனைப் பொருட்களை விற்றதாக நான்கு வியாபாரிகளைப் பொலிசார் கைதுசெய்தனர்.

தெல்லிப்பழை பிரதான வீதியிலுள்ள ஒரு ஸ்தாபனத்தில் ஒரு போத்தல் ஹார்லிக்ஸ் பால்மா 5 ரூபா 50 சதத்திற்கு விற்பனவு செய்ததாக ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

சுன்னாகத்தில் இரு வர்த்தகர்கள் தீப்பெட்டி, பாசிப் பயறு போன்றவற்றை கூடுதலான விலைக்கு விற்றதாக குற்றஞ்சாட்டிக் கைதுசெய்யப்பட்டனர்.. ஐந்து சதத்திற்கு விற்கப்படவேண்டிய தீப்பெட்டியை 10 சதமாகவும், ஒரு றுத்தல் பாசிப் பயறு கட்டுப்பாட்டுவிலை 51 சதமாக இருக்க 70 சதத்திற்கும் இவ்விரு வியாபாரிகளும் விற்றனராம்.

உரும்பராய் கிழக்கில் ஒரு வர்த்தகர் தமது கடையில் 'ஹார்லிக்ஸ்' பால்மாவை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 3 ரூபா 80 சதம் கூட்டி விற்றதாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் மேற்படி நான்கு நபர்கள் மீதும் குற்றம் சுமத்தி வழக்குத்தாக்கல் செய்யவிருககின்றனர்.

---

# சமஷ்டி முறையும் சிறுபான்மை பிரச்னையும்

## திரு. சண்முகதாசன் உரை

யாழ்ப்பாணம், திங்கள்
'முதலாளித்துவ பொருளாதார அமைப்பின்கீழுள்ள சமஷ்டி ஆட்சிமுறையின்கீழ் சிறுபான்மை மக்களின் பிரச்னை உலகில் எந்த நாட்டிலும் நிரந்தரமாக தீர்க்கப்படவில்லை. சோஷலிசபொருளாதார அமைப்பின்கீழ் அடங்கியிருந்தால்தான், சிறுபான்மையினரின் பிரச்னை தீரும்.'

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் திரு. என். சண்முகதாசன் நேற்று நிகழ்த்தியசொற்பொழிவில் மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் பெண்கள் உட்படஏராளமானோர் திரண்டிருந்தனர். யாழ்ப்பாண மாநகர சபை முன்னாள் மேயர்கள் சிலரும், முன்னாள் அங்கத்தவர்கள் சிலரும் இக்கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

திரு. சண்முகதாசன் மேலும் கூறியதாவது: கனடா, பெல்ஜியம், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் சமஷ்டிஅமைப்பின் கீழ் இருந்தபோதிலும், சிறுபான்மையினர் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. கனடாவில் பிரான்சு மொழிபேசுவோர்களும், ஆங்கிலமொழி பேசுவோர்குமிடையில் எப்பொழுதும் சச்சரவு இருந்து வருகிறது. ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கொண்டிருக்கின்றனர். இங்குள்ள கியுபக் நகரில்பிரான்சுமொழிபேசக்கூடியவர் தாங்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென கோருகின்றனர். அங்கு சென்ற பிரான்சின் தலைவர் டீகால்கூட இதனை ஆதரித்துப்போசியுள்ளார். இதனால் அவர் மற்றப்பகுதிகளுக்குச் செல்ல முடியவில்லை,

சுபல்ஜியத்தில் இரு இன மக்களிடையே பெரும் கலவரம்ஏற்பட்டுஇரு இனத்தவரும் ஒருவரையொருவர் எதிர்த்தபடியிருக்கின்றனர். அமெரிக்காவில்சிறுபான்மையினத்தவரான நீக்ரோமக்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். ஆயுதம்தாங்கிஉரிமை கோரி போரிடுகின்றனர்.

---

## பிரதமரை சந்திப்பர்

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்பாணம் மாநகரசபை தேர்தல் சம்பந்தமாக, முன்னாள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் செல்லும் கோஷ்டி இம்மாதம் 26-ம் திகதி பிரதமர் டட்லி சேனநாயக்காவைப் பேட்டி காணும்.

இக்கோஷ்டியில் முன்னாள் மாநகரசபை உறுப்பினர்கள் சிலர் அடங்கியிருப்பார்கள்.

---

# முதல் எதிரிக்கு 4 வருடக்கடூழியம்

## 2-ம் எதிரிக்கு அபராதம்

காலி, திங்கள்
கொலைசெய்யும் நோக்கம் இருக்கவில்லையென்றும், கைமோசக் கொலையென்றும் எதிரி ஒப்புக்கொண்டதால் காலி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் எதிரிக்கு நான்கு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஒடவெலிவிற்றி என்னும் இடத்தைச் சேர்ந்த கே.ஜி. சிறிசேன என்பவரை அதே கிராமத்தைச் சேர்ந்த என். ஜி. தெனேறிஸ், அவரது சகோதரர்களான என். ஜி. சிறிபாலா, என்.ஜி யிராம்பி ஆகியோர்மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மூன்றுவது எதிரி பிராம்பி விடுதலை செய்யப்பட்டார். முதல் எதிரி தெனேரிசுக்கு நான்கு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் இரண்டாவது எதிரி சிறிபாலாவுக்கு 500 ரூபாய் அபராதம் அல்லது ஆறுமாதக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து நீதியரசர் திரு.வி.தென்னக்கூன் தீர்ப்பளித்தார்.

---

## "ஞானநிலை ஏற்பட வழி"

உடுவில், திங்கள்
"இன்று ஈழமக்களிடையே ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியும், சிறப்பாக சிறுவர் மத்தியில் வளர்ந்துள்ள சமயப்பற்றும் காலத்துக்குக் காலம் தமிழகத்தில் இருந்துவரும் தமிழ்அறிஞர்கள் சமயப்பெரியார் சொற்பொழிவுகளால் இங்கு மீண்டும் சைவமக்கள் மத்தியில் ஞானநிலையை ஏற்படுத்த வழிவகுக்கின்றன என்பது கண்கூடு".

உடுவில் வைரவகோவிலில் நடைபெற்றுவரும் திருவெம்பாவை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சொற்பொழிவுநிகழ்த்திய சைவப் பெரியார் திரு. எஸ். சின்னத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

---

## சாரதாதேவியார் பிறந்ததின விழா

மட்டக்களப்பு, திங்கள்
ஸ்ரீசாரதாதேவியாரின்115 வதுபிறந்ததின விழா இம்மாதம் 23-ந்திகதி கல்லடி உப்போடை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் விபுலானந்த மண்டபத்தில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ச. கதிர்காமநாதன் தலைமையில் கொண்டாடப்பட விருக்கிறது. மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆஸ்ரமத்தினர் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

---

# சண்முகதாசனின் மட்டுவில் பேச்சு

## பொலிஸ் அதிபர் விசாரணை

யாழ்ப்பாணம், செவ்வாய்
இலங்கைக் கம்யூனிஸ்ட் [சீனச்சார்பு]கட்சித்தலைவர் திரு. என். சண்முகதாசன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தினால் விசாரணை செய்யப்பட்டார். சுமார் இரண்டு மணிநேரம் இதுநடைபெற்றது.

சென்றமாதம் 30-ம்திகதி மட்டுவிலில் நடந்தஒரு கூட்டத்தில் திரு.சண்முகதாசன் பேசியபோது, யாழ்ப்பாணத்தில் சில வாரங்களுக்கு முன், இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரின் கார் மீது முட்டை வீசியது பற்றியும் நவம்பர் மாதம் 5-ந் திகதி பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருப்பதுபற்றியும் குறிப்பிட்டது சம்பந்தமாகவே திரு.சண்முகதாசனை வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. சுந்தரலிங்கம் விசாரணை செய்தார். பலாத்காரச் செயல்களுக்கு தூண்டிவிடுவதாக திரு.சண்முகதாசன் மீது தாம் வழக்கு தாக்கல் செய்யநேரிடுமென்று திரு. சுந்தரலிங்கம்கூறியதாகவும் தெரியவருகிறது.

---

## இடமாற்ற........

[1ம் பக்கத்தொடர்ச்சி]

ஆசிரியர்கள் பலர் தமிழ் எம். பி.க்களிடம் செய்து கொண்ட முறைப்பாடுகளை முன்னிட்டு உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகிய மூவரும் கல்வி மந்திரியின் நிரந்தரக்காரியதரிசி திரு. கமகேயை நேற்று முன்தினம் சந்தித்து இதுவிஷயமாக கலந்து பேசினர்.

எம். பி.க்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஆசிரியர்களின் முறைப்பாடுகளில் முக்கியமாக 45 வயதிற்கு மேற்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் வெளியிடங்களில் 4, 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்கள் மீண்டும் வெளியிடங்களுக்கு மாற்றப்பட்டவை, புதிய பாடசாலை புனரமைப்புகளால் பதவி உயர்வு பெற்ற ஆசிரியர் இடமாற்றம் ஆகியவை முக்கிய குறைபாடுகளாகக் காணப்பட்டன. திரு. கமகே தம்மைச் சந்தித்த எம். பி.க்களிடம் இம்மாதம் 20-ந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அனுப்பப்படும் ஆசிரியர் இடமாற்ற ஆட்சேபனைகளை அதற்குப் பின்னர் ஒரு திகதியில் பரிசிலனை செய்து, தகுதியான ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிச்சயம் நீதி வழங்கப்படும் என்றும், 20-ந் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் ஆட்சேபனைக் கடிதங்ள்க எதுவிதத்திலும் கவனிக்கப்படமாட்டாது என்றும் உறுதி தெரிவித்தாராம்.

---

சங்கானை

## கொலைமுயற்சி வழக்கு எதிரி விடுதலை

குரும்பசிட்டி, திங்கள்
சங்கானை கொலைமுயற்சி வழக்கில் காயப்பட்ட நபரது சாட்சியம் முரண்பாடு பொய் எனத் தெரிவித்து மல்லாகம் மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார். இவ்வழக்கில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி சங்கானையைச்சேர்ந்த வலிபுரம் செல்லமுத்து அதேயிடத்தைச்சேர்ந்த நன்னியன் குட்டித்தம்பி என்பவரைச் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாக சங்கானைப் பொலிஸார் குற்றஞ் சுமத்தியுள்ளனர். எதிரிசார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

---

## "கி. சேவையாளரை மாற்றுதீர்"

முல்லைத்தீவு, திங்கள்
"முள்ளியவளை கிராம சேவையாளர் திரு. எஸ். பாலசிங்கம் ஜனவரி முதல் கொக்கிளாய்க்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை உடன் ரத்து செய்து அவரை இன்னும்சிலகாலம் முள்ளியவளையில் சேவை செய்ய விடவேண்டும். முள்ளியவளையில் அவர். தனது மூன்றுமாதகாலத்தில் பலகுற்றச்செயல்களைத் தடுத்துள்ளார்" என முள்ளியவளை கிராமசபைத் தலைவர் திரு.கே.செல்லத்தம்பி வவுனியா மாவட்ட அதிபருக்குஅனுப்பியுள்ளமகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



நத்தார்-புத்தாண்டை முன்னிட்டு
விசேஷ மலிவு விற்பனை
19 - 12 - 67 — 31 - 12 - 67
கண்கவர் கலர்களில்
உயர்ந்த ரக பட்டு சேலைகளுக்கு
5% வீதம்
விசேஷ கழிவு வழங்கப்படும்.
மற்றும்
உங்களுக்குத் தேவையான எல்லாவகையான
ஜவுளி வகைகளுக்கும்
மிகவும் விலை குறைக்கப்பட்டிருக்கிறது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
ஆ. அப்பையா அன் கோ.,
82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன் : 506

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 1-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org